**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No**. 229/2013

**வழக்கு சாட்சி PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கருப்புசாமி | கணவர் பெயர் | : ----- |
| தகப்பனார் பெயர் | குஞ்சுகருப்பண் | வயது | : 59 |
| கிராமம் | கொளத்தூர் | நாள் | : 12.11.2025 |
| தாலுகா | மேட்டுர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

<u>முதல் விசாரணை :</u>

1. நான் கொளத்தூர் கிராமத்தில் 2024 ஜீலை மாதத்திலிருந்து கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கபெற்றதன் பேரில் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ச.எண்.315/8 க்குண்டான சிட்டா, ச.எண்.315/8 க்குண்டான அ–பதிவேடு மற்றும் ச.எண்.315 க்குண்டான புலவரைபடம் ஆகியவற்றை கொண்டுவந்துள்ளேன். **ச.எண்.315/8 க்குண்டான சிட்டா உண்மை நகல் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ச.எண்.315/8 க்குண்டான அ–பதிவேடு உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ச.எண்.315 க்குண்டான புலவரைபடம் உண்மை நகல் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2. மேற்கண்ட ச.எண்.315/10A வில் கண்ட சொத்திற்கு C.S.மணி என்பவர் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அந்த விவரம் சா.சா.ஆ–2 அ–பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ச.எண்.310/B என்ற சர்வே எண் கொளத்தூர் கிராமத்தில் இல்லை. ச.எண்.315/10C ஆனது தெரு என்று அடங்கல் கணக்குகளில் உள்ளது. ச.எண்.315/10C ன் அடங்கல் கணக்கு உண்மை நகல் **சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ச.எண்.315/10A, 315/10B, 315/10C ஆகியவை நத்தம் செட்டில்மெண்டின் போது வழங்கப்பட்ட பட்டா ஆகும். ச.எண்.315/10A, 315/10B, 315/10C ஆகியவற்றிற்கு C.S.மணி என்பவர் செட்டில்மெண்ட் காலத்திற்கு பிறகு தன் பெயரில் தனித்தனியாக பட்டா பெற்றுள்ளார்.

அந்த சமயத்தில் நான் கொளத்தூரில் பணியில் இல்லாததால் அந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. அழைப்பாணையில குறிப்பிட்டுள்ள ச.எண்.310/B என்று காண்பிக்கப்பட்டுள்ள 7 அடி நீளம், 40 அடி அகலம் என்ற பகுதி எதுவும் கொளத்தூர் கிராமத்தில் இல்லை.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

1) நான் தற்போது நீதிமன்றத்திற்கு ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் கேட்கப்பட்டு நான் சமர்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தான் முதல் விசாரணை சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஆமாம். நான் அழைப்பாணை கிடைக்கபெற்ற பிறகு ச.எண்.315/8, 315/9, 315/10A, 315/10C ஆகியவற்றை நேரில் சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் அந்த நிலங்களை ஏதேனும் அளவீடு செய்து பார்த்தேனா என்றால் இல்லை, நான் பார்வையிட்டு மட்டும் தான் வந்தேன். நான் பார்வையிட்டதன் அடிப்படையில் எந்த சாட்சியமும் அளிக்க முடியாது என்றால் சரிதான். சா.சா.ஆ.1 சிட்டாவில் ச.எண்.315/8 ல் கண்ட 0064.0 சதுர மீட்டர் பரப்பு கொண்ட நிலமானது பட்டா எண்.339 என்று வழங்கப்பட்டு அது குப்பன் மனைவி சௌந்தரி என்பவர் பெயரில் தான் தற்போது வரை இருந்து வருகிறது என்றால் சரிதான். பட்டா, சிட்டா இரண்டுமே ஒன்று தானா என்றால் ஆமாம்.

2) தற்போது வரை வாதி குருசாமி பெயருக்கு மேற்பட்ட ச.எண்.315/8 ல் கண்ட சொத்திற்குண்டான வருவாய் ஆவணங்கள் எதுவும் மாற்றப்படவில்லை என்றும், குப்பன் மனைவி சௌந்தரி பெயரில் தான் தற்போது வரை உள்ளது என்றால் சரிதான். உரிய மனு தாக்கல் செய்து, உரிய ஆவணங்கள் சமர்பித்திருந்தால் வாதி குருசாமி பெயருக்கு மேற்கண்ட ச.எண்.315/8 மாற்றப்பட்டிருக்கும் என்றால் சரிதான். ச.எண்.315/8 க்கு தான் வாதி குருசாமி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணங்களில் ச.எண்.315/9 ல் மனை என்று குறிப்பிட்டு 0.0077.0 சதுர மீட்டர் பட்டா எண்.1224 ஆனது C.S.மணி என்பவர் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு கீழ் பழைய உட்பிரிவு ச.எண்.315/9 மற்றும் ச.எண்.315/10B ஆகியவைகள் ஒருங்கிணைக்கப்பட்டு, ச.எண்.315/9 என்று குறிக்கப்பட்டு, மனை என குறிக்கப்படுகிறது என்று எழுதப்பட்டு,

அதன் அருகில் As per 8A/39/1407(D) dated : 28.08.1997 என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

3) மேற்கண்ட உத்தரவானது 02.09.1997 ல் மீண்டும் திருத்தம் செய்து, C.S.மணி பெயரில் ச.எண்.315/9 ல் 0.0068.0 சதுர மீட்டர் ச.எண்.315/10B ல் 0.0009.0 சதுர மீட்டர் ஆகிய இரண்டையும் ஒருங்கிணைத்து ஒரே பட்டா எண்.1224 ல் 0.0077.0 சதுர மீட்டருக்கு ஒரே பட்டாவாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ச.எண்.315 ன் புல வரைபடத்தில் புதிய உட்பிரிவு 10A to 10C வரை 8A/39/1407 ன் படி வரைவு செய்யப்பட்டது. மேலும் இதன்படி பழைய உட்பிரிவு 9 மற்றும்புதிய உட்பிரிவு 10B ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு 9 என குறிப்பிடப்பட்டது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட உத்தரவின்படி தான் ச.எண்.315/9 ஆனது C.S.மணி பெயரில் ஒரே பட்டா எண்.1224 ல் 0.0077.0 சதுர மீட்டருக்கு ஒரே பட்டாவாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள புலவரைபடத்திலே யே After clubbing என்று எழுதப்பட்டு, அதன் கீழ் ச.எண்.315/8, 9, 10A, 10C ஆகியவை குறிப்பிடப்பட்டு, அதன் நீளம், அகலம் தனித்தனியாக குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) ச.எண்.315/10A ஆனது நத்தம் நிலவரி திட்டம் தூய அடங்கல் பதிவேடு என்று நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ−4 ஆவணத்தில் ச.எண்.315/10 ன் விஸ்தீரணம் 0.0116.0 சதுர மீட்டரானது பட்டா எண்.12 ன் கீழ் த.அப்பு என்பவர் பெயரில் இருந்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். இதற்கு முன்பு ச.எண்.315/10 என்பது அப்பு என்பவர் பெயரில் தான் பட்டா வழங்கப்பட்டிருந்ததா என்றால் ஆமாம். அதன் பிறகு ச.எண்.315/10A 0.0071.5 என பிரிக்கப்பட்டு அப்பு என்பவர் பெயரிலும், ச.எண்.315/10B 0.0009.0 என பிரிக்கப்பட்டு C.S.மணி என்பவர் பெயரிலும், ச.எண்.315/10C 0.0027.5 என பிரிக்கப்பட்டு சந்து என்றும் சா.சா.ஆ.4 அடங்கல் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது எதன் அடிப்படையில் மாறுதல் ஆனது என்று அதன் அருகிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) நான் நேரில் சென்று பார்த்தபோது மேற்கண்ட அப்பு என்பவர் வாதி குருசாமியின் சகோதரர் என்று எனக்கு தெரியவந்ததா என்றால் தெரியவந்தது. கொளத்தூர் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் ச.எண்.315/8 ற்கு சௌந்தரி என்பவரை தவிர வாதி குருசாமி பெயரில் எந்த ஒரு உரிமை ஆவணம் இல்லையா என்றால் ஆமாம். பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்றால் கிரைய பத்திரம், தானசெட்டில்மெண்ட் போன்ற உரிய பதிவு ஆவணங்கள் மற்றும் ஒருவேளை பட்டா வழங்கப்பட்ட நபர் இறந்துவிட்டதால் பட்டா மாறுதல் செய்யவேண்டும் என்றால் அவரது இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழுடன் வட்டாட்சியரிடம் மனு செய்தால் உரிய ஆய்வு மேற்கொண்டு பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்படும். இறந்தவரின் வாரிசுகள் யாரும் இல்லாதபட்சத்தில் மனு தாக்கல் செய்யப்ட்டவருக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்று நீதிமன்றம் மூலம் பாத்தியம் என்று நீதிமன்றம் மூலம் உத்தரவு பெற்றிருக்க வேண்டும் என்றால் சரிதான்.

6) ச.எண்.315/8 ஐ பொறுத்து சௌந்தரி பெயரிலிருந்து குருசாமி பெயருக்கு பட்டா மாறுதல் செய்து தரும்படி மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இன்றைய தேதி வரை ச.எண்.315/8 ல் கண்ட சொத்திற்கு வருவாய் ஆவணங்கள் அனைத்தும் சௌந்தரி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :–</u>

1) ச.எண்.315/8 ல் குறிப்பிட்டுள்ள குப்பன் மனைவி சௌந்தரி என்பவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் தான் வாதி குருசாமி பெயரில் தனி வட்டாட்சியர் நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் வழங்கிய பட்டா என்றால் எனக்கு தெரியவில்லை, கிராம கணக்குகளில் அனைத்தும் குப்பன் மனைவி சௌந்தரி பெயரில் தான் உள்ளது.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.